1994 மார்ச் 30]

சாலை ஊழியர்களுக்கு கிடைக்காத உதவிகளை இந்த ஆண்டு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் செய்த தோடு மட்டுமல்ல ; 1988-க்குப் பிறகு இந்த ஆண்டுதான் அந்தப் பகுதியில் வாழ்கிற தொழிலாளர்களுக்குத் தேவை யான பெட்சீட், குடைகள் வழங்குவதற்கு மூன்று இலட்சத்து முப்பத்தேழாயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களின் வாழ்வை உயர்த்துவது என்பதும், அந்தத் தொழிற்சாலையை இலாப நோக்கோடு செயல்படுத்துவது என்பதும் அரசி னுடைய தலையாய கடமையாகக் கொண்டு செயல்படுத்தப் பட்டுவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 153— திரு ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சிங்கை கோவிந்தராசு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

153—

தமிழக அரசுத் திரைப்படப் பிரிவின் செய்திச்சுருள்களை திரையரங்குகளில் திரையிட நடவடிக்கை எடுத்தல்.

? 10024—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் திட்ட விளக்கங்களை தமிழக அரசு திரைப்படச் செய்திப் பிரிவு தொகுத்து வழங்கும் " செய்திச்சுருள் " சென்னையிலுள்ள திரையரங்குகளில் காட்டப்பட்டு வந்தது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசின் செயல் திட்டங்களைத் தொகுத்து " செய்திச்சுருளாக " திரையரங்குகளில் மீண்டும் காண்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்திமற்றும் விளம்பர துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு திரைப் படப்பிரிவு தயாரிக்கும் செய்தி மலர்கள் மத்திய அரசு திரைப்படப் பிரிவு வழியாக சுழற்சி முறையில் திரையரங்கு களுக்கு விநியோகிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டு வருகிறது. செய்தி மலர்கள் திரையிடுவது நிறுத்தி வைக்கப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தில் நகரப் புறங்களிலும், கிராமப்புறங்களிலும் இருக்கக்கூடிய திரை யரங்குகளில் நமது அரசினுடைய செய்தி மலர்களைத் திரையிட்டுவருவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் பல்வேறு திரையரங்குகளில் இது சரியாக திரையிடப் படாமல் இருக்கிறது. அப்படி திரையிடப்படாமல் இருக்கிற திரையரங்குகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அதேபோல் நமது அரசின் சாதனைகளை விளக்கி அரசின் செய்திப்படம் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரிக்கிற செய்தி மலர்கள் தமிழ்நாட்டில் உள்ள அத்துணைத் திரையரங்குகளிலும் காட்டப்படுகின்றன. திரைப் படப்பிரிவின் சார்பிலே தயாரிக்கப்படுகிற அந்தச் செய்தி மலர்களைத் திரையிடாத திரையரங்குகள் மீது சட்டவிதி களின்படி 'சி' படிவ உரிமத்தின் நிபந்தனை 2-ஏ-யின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. செய்தி மலர்களைத் திரையரங்குகள் கண்டிப்பாகக் காண்பிக்கவேண்டும் என்றும், இது குறித்து திடீர் சோதனைகள் மேற்கொண்டு செய்தி மலர்களைத் திரையிடாத திரையரங்குகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அனைத்து உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கும் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அண்மையில் கூட இந்த மாதம் சென்னையில் இருக்கிற 109 திரையரங்குகளில் 80 திரை யரங்குகளில் தமிழ்நாடு திரைப்படப்பிரிவு தயாரித்த செய்தி மலர் 387 காட்டப்பட்டிருக்கிறது 5 சுற்றுக்களில். இப்போது 6-வது சுற்று ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு செய்தித்துறை பிரிவினுடைய திரைப் படத்தை சில தியேட்டர்களில் வெளியிடாதது மட்டுமல்ல

[1994 மார்ச் 30]

வெளியிட்டு இரண்டொரு செய்திகளைக் காட்டிவிட்டு நிறுத்தி விடுவதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். ஆகவே கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு இரண்டாவதாக இப்போது கேபிள் டி.வி.-க்கு அதிகாரபூர்வமாக உரிமம் தந்த காரணத்தினால் நம்முடைய செய்தித்துறை விளம்பரத்தை கேசட் மூலமாக, கேபிள் டி.வி. மூலமாக மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்குண்டான நடவடிக்கையை எடுக்க அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு திரைப் படப் பிரிவு 10 நிமிடங்கள் ஓடக்கூடிய 35 எம்.எம். வண்ணச் செய்தி மலர் ஒன்று வெளியிடுகிறது. மத்திய அரசு திரைப் பட பிரிவு மூலம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் வெளியிடுவதற்காக ஒவ்வொரு செய்தி மலரிலும் 149 பிரதிகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே அந்தச் செய்தி மலர்கள் மூலம் திரையரங்குகளில் நம்முடைய அரசினுடைய சாதனைகள் விளக்கப்படுகின்றன. கேபிள் டி.வி.-யிலே இந்தச் செய்தி மலர் வெளியிடப்படுமா என்று இங்கே கேள்வி கேட்கப்பட்டது. அது குறித்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் திரைப்படம் மூலம் தமிழக அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் திரையரங்குகளில் காண்பிக்கின்றபோது, இந்தத் திரையரங்குகளில் மாண்புமிகு அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தரக்குறைவாக காண்பிக்கப்படுகின்ற இந்த அவல நிலையை அரசு தடுக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும். இது செய்திப் படங்களைக் காண்பிக்காத தியேட்டர்களைப் பற்றியது. திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக செய்திச் சுருளாக பல்வேறு தியேட்டர்களிலே இடைவேளை விடும் போது சில காட்சிகளைக் காண்பித்து வருகிறார்கள். நான் சமீப காலத்தில் மகளிர் மட்டும் என்ற சினிமா படத்தை தேவி தியேட்டரிலே பார்ப்பதற்காக சென்றிருந்தேன். அந்தப் படம் துவங்குவதற்கு முன்பும் செய்திச்சுருள் போடவில்லை.

இடைவேளையிலும் போடவில்லை. குறிப்பாக சிறுசேமிப்பு சார்பாக விளம்பரத்தை நாங்கள் கொடுத்திருக்கிறோம். அந்த விளம்பரத்தை எல்லா தியேட்டர்களிலும் போட வேண்டுமென்று கட்டாயப்படுத்தியிருந்தாலும், அன்றைய தினம் அந்தத் தியேட்டரிலே வெளியிடவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் மீது கண்காணித்து, இப்படிப்பட்ட தியேட்டர்களிலே இடைவேளையிலே செய்திச்சுருள் காண்பிக்காத தியேட்டர் மீது நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஒவ்வொரு திரையரங்கமும் மத்திய அரசு மாநில அரசு படங்களைத் திரையிடுவதற்காக ஒவ்வொரு காட்சி துவங்கும் முன்னதாகவோ அல்லது இடை வேளையின் போதோ 20 நிமிடங்கள் கட்டாயம் ஒதுக்க வேண்டும். அந்த 20 நிமிடங்களை மாநில அரசும் மத்திய அரசும் சரிபாதியாகவும், சில வேளைகளில் வசதிக்கு ஏற்பவும் பகிர்ந்துகொள்கின்றன. ஆகவே அந்த அடிப்படை யிலே தமிழ்நாடு அரசு தயாரிக்கின்ற திரை மலர்கள் திரை யரங்குகளில் காட்டப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட தியேட்டரைச் சொல்லி அதிலே நம்முடைய செய்திச் சுருளைக் காட்டவில்லை என்று இங்கே சுட்டிக் காட்டினார். இப்படிப்பட்ட குறைபாடுகளும் குற்றச்சாட்டுகளும் எழுந்த காரணத்தால், அரசின் செய்தி மலர்கள் சில திரையரங்குகளில் காண்பிக்கப்படவில்லை என அரசுக்கு வந்த தகவலின் அடிப்படையில் நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி யின் உத்தரவின் பேரில் (மேசையைத் தட்டும் ஒலி) செய்தி மலர்களை காண்பிக்காத திரையரங்குகளின் உரிமத்தை ரத்து செய்யவும் அல்லது தற்காலிகமாக ரத்து செய்யவும் மேலும் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடரவும் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களுக்கும், சென்னை காவல் துறை ஆணையாளர் அவர்களுக்கும் விரிவான அறிவுரைகள் உள் துறை செயலாளர் அவர்களால் 11—3—1994 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், செய்தி மலர்கள் திரையிடப்படுவதைக் கண்காணிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளும் திடீர் சோதனைகள் பற்றியும் அனைத்துத் திரையரங்குகளிலும் செய்தி மலர்கள் திரை யிடப்படுகிறதா என்பது குறித்தும், செய்தி மலர்கள் காணபிக்கப்படாத திரை அரங்குகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், மாதம் ஒரு அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கும், செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் அலுவலகத்திற்கும் தவறாது

அனுப்பப்பட வேண்டுமென்று அனைத்து உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி, உள் துறை செயலாளர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன. அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 154, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

154—

அரசின் சாதனைகளை விளம்பரப்படுத்த சாதனைக் கல்வெட்டு கள் நிறுவுதல்

* 23590—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்போதுள்ள அரசின் சாதனைகளை, சாதனைக் கல் வெட்டுகள் அமைத்து மக்களுக்கு விளம்பரப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு சிறந்த நலத் திட்டங்களை அளிப்பதில் உலகிலேயே முன்னணியில் உள்ள அரசு டாக்டர் புரட்சித் தெய் வம் அரசு. அதனால்தான் முன்பு நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசா அவர்கள் உலகிலுள்ள ஆதரவற்ற மக்களின் ஆசியோடு இப்போது நோபல் பரிசு பெற இருக்கும் நம் டாக்டர் புரட்சித் தெய்வத்தை நேரில் வந்து பாராட்டுகிறார். மக்களுக்கு உண்மை யாகவே உதவி செய்து, மக்கள் மனதில் நீங்காத, அழிக்கவோ, மறைக்கவோ வேறு எவரும் புகமுடியாத இடத்தில் இருக்கின்ற டாக்டர் புரட்சித் தெய்வம் அரசின் சாதனைகளை, டாக்டர் எம்.ஜி.ஆர். காலத்தில் தன்னிறைவுத் திட்ட அறிவிப்புப் பலகை களை ஒன்றிய அலுவலகம் விளம்பரப் பலகைகளாக வைத்தது போல், ஒவ்வொரு ஆண்டு சாதனைகளையும் விளம்பரத் துறை மூலம் மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், ஒன்றிய,